**கவனிக்க .**– *25.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1835 - 2013 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2013.11.01

*1835 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 974 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 975 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2013 இன் இல. 340*

டிஜவீஎப்/ஆர்ஈசீரீ/65/ஏவை.

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் 2010, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து இராணுவ சேவையிலுள்ள சிவில் உத்தியோகத்தர்களுக்கான திட்டத்தின் அடிப்படையில் இலங்கைத் தரைப்படை தொண்டர் படையில் மேஜர் பதவியிலிருந்து அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து இலங்கை தரைப்படையின் பொது சேவைகள் படையிற்கு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கெடெற் உத்தியோகத்தர் ஹெட்டிஆராச்சிகே எரிக் சிரான் பிரசன்ன குமார (கெ/33311)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, மாச்சு 23.

11-101

---

எம்ஓடி /டிஈஎவ்/07/01/ஏவீஎவ்/டபிள்யூஈஎல்/17.

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

2011, யூலை மாதம் 28 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கைத் தரைப்படை தொண்டர் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் சமந்த சன்ஜீவ வாகிஷ்ட, இவைப (உ/5117)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, திசெம்பர் 30.

11-121

---

*2013 இன் இல. 341*

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/280/129/ஏவை.

## இலங்கை தரைப்படை - தொண்டர்படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, யூலை மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) ஹபன் பேடிகே ரஞ்ஜித் பிரேமகுமார, இதேபாப (உ/6526)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 27.

11-122

---

*2013 இன் இல. 342*

டிஜவீஎப்/ஆர்ஈசீரீ/65/ஏவை(I).

## இலங்கை தரைப்படை - தொண்டர் படை

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் 2010, ஓகத்து மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இராணுவ சேவையிலுள்ள சிவில் உத்தியோகத்தர்களுக்கான திட்டத்தின் அடிப்படையில் இலங்கைத் தரைப்படை தொண்டர் படையில் கப்ரின் பதவியிலிருந்து அதிகார வாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து இலங்கை தரைப் படையின் பொது சேவைகள் படையிற்கு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(அ) கெடெற் உத்தியோகத்தர் ரன்உலுகே நிமல் விமலவீர (கெ/33308)

(ஆ) கெடெற் உத்தியோகத்தர் கலுதேவ கித்சிரி சந்தன த சில்வா (கெ/33309)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, மாச்சு 23.

11-123

2013 இன் இல. 343

டிஐவீஎப்/ஆர்ஈசீரீ/65/ஏவை.

**இலங்கை தரைப்படை- தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய மகளிர் கெடெற் உத்தியோகத்தர்கள் 2009, சனவரி மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையில் லெப்டினட் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து இலங்கை தரைப்படையின் பயிற்சிப் படையிற்கு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கெடெற்/ 32108 மகளிர் கெடெற் உத்தியோகத்தர் கடவதே கெதர சந்திமா வசந்தி தர்மபால
கெடெற்/ 32109 மகளிர் கெடெற் உத்தியோகத்தர் சுரம்யா டெரனி ஹெட்டிஆரச்சி

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2009, ஓகத்து 27.

11-100

---

டிவீஎவ்/ஆர்ஈசீரீ/278/71/ஏவை.

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தரைப்படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை தொண்டர் படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனட் மஞ்சுல பிரசாட் மதரசிங்க, இதேபாப (உ/ 5901)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, ஓகத்து 30.

11-124

---

எம்ஓடி/டீஈஎப்/09/ 26/சீடபிள்யூ/ 07.

**தேசிய மாணவ வீரர் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தரநிலையிலிருந்து நீக்குதல்

கீழே குறிப்பிடப்படுகின்ற பெயரையுடைய உத்தியோகத்தர் 2013, ஓகத்து மாதம் 07 ஆந் திகதியிலிருந்து அதிகார ஆணையிலிருந்து நீக்கப்படுதலை அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் அங்கீகரிக்கின்றார்கள் :-

அ/ 5352 இரண்டாம் லெப்டினனட் ஜேகேசீ தஹநாயக்க

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, செத்தெம்பர் 05.

11-102

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**யூனியன் வங்கி லிமிட்டெட்**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ சபையால் 2013, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நடைபெற்ற யூனியன் வங்கி கொழும்பு பீஎல்சியின் பணிப்பாளர் சபையினால் பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிங்கிரிய தல்கஹபிட்டிய, பெரகதோருவத்த, 385/ 2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த இதன் பின்னர் 'அடகு வைத்தவர்' என அழைக்கப்படும் ஹெட்டிஆரச்சிகே பிராங் ரங்கன சம்பத் பெரேரா மறுபெயர்

ஹெட்டிஆரச்சிகே பிராங் ரங்கன சம்பத் என்பவரால் யூனியன் வங்கியிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுள்ளதாதலாலும் மேற்கூறிய அடகு வைத்தவரால் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ.ஏ.எல்.பீ. தம்மிக சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1477 ஆம் இலக்க 2011.05.12 ஆந் திகதிய ஈட்டுமுறியை நிறைவேற்றி மேற்கூறிய கடன் வசதியின் காரணமாக யூனியன் வங்கிக்கு அறவிடவேண்டிய எழுபத்திரண்டு இலட்சம் ரூபா (ரூ. 72,00,000) தொகையொன்றும் அதன் மீதான வட்டியை மீளச் செலுத்துவதற்காக பிணையாக இதன் கீழ் அட்டவணையில் விபரமாக காட்டப்பட்டுள்ள ஆதனத்தை ஈடுவைத்து பிணைக்கு வைத்துள்ளதாதலாலும், 2013.07.28 ஆந் திகதிக்கு எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா இரண்டு சதம் (ரூ. 78,25,699.02) தொகையொன்றும் மேற்கூறித்த கடன் வசதியின் காரணமாக 2013.07.29 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை அதன் மீது தவறுகை செய்யப்பட்ட வருடாந்த வட்டியும் சொல்லப்பட்ட அடகு வைத்தவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு பெறவேண்டியும் அறவிட வேண்டியும் உள்ளதாதலாலும்,

எழுபத்திரண்டு இலட்சத்த ஒன்பதாயிரத்த எண்ணூற்று எட்டு ரூபா (ரூ, 72,09,808.00) தொகையொன்றும் 2012.03.13 ஆந் திகதி தொடக்கம் அதன் மீது ஆண்டொன்றுக்கு வட்டி மற்றும் மேற்குறித்த 1477 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பிரகாரம் அறவீடு செய்து கொள்வதற்கு கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீக்கு உரித்துடைய எல்லா வேறு பணத்தொகைகளையும் அறவீடு செய்து கொள்வதற்காக கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயிடம் அடகு வைக்கப்பட்ட ஆதனத்தை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஹேமசந்திர தளுவத்த அவர்களுக்கு அதிகாரம் உரித்தளிக்கப்பட்ட 2012.07.27 ஆந் திகதிய தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையால் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாதலாலும்,

மேற்குறித்த கடன் மீதியை, செலுத்தித் தீர்ப்பதில் மேற்குறித்த அடகு வைத்தவர் தவறியுள்ளார் என யூனியன் வங்கி திருப்தியடைந்ததன் பின்னர், யூனியன் வங்கி 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி செயல்பட்டு எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தையாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா இரண்டு சதம் (ரூ. 78,25,699.02) தொகையும் 2013.07.29 ஆந் திகதி தொடக்கம் மேற்குறித்த தொகை மீது தவறுகை செய்யப்பட்ட வருடாந்த வட்டியும் மேலும் மேற்குறித்த 1477 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் யூனியன் வங்கிக்கு அறவீடு செய்துகொள்வதற்கு உரித்துடைய எல்லாப் பணத்தொகைகளையும் அறவீடு செய்து கொள்வதற்காக மேற்குறித்த 1477 ஆம் இலக்க ஈட்டுமுறியின் அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் அதற்கு உட்பட்டு யூனியன் வங்கிக்கு அடகு வைக்கப்பட்ட இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள ஆதனத்தை மேற்குறித்த 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அச் சட்டத்தின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம்பெற்ற ஏலவிற்பனை யாளர் திவங்க அன்ட் ஒக்ஷனியோர்ஷ் இடம் உரித்தாக்குவதற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் இதனால் தீர்மானிக்கப்படுகிறது."

**ஆதன இடாப்பு**

1. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய பிரிவினுள் கட்டுகம்பொல ஹத்பத்துவே, கினியாகம கோரளே பிங்கிரியவில் அமைந்துள்ள தங்கஸ்பிட்டியேவத்த, கொஹோம்பகஹவத்த தங்கஸ்பிட்டியேஹேன, திக்ஹேன என்னும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எச். டபிள்யூ. நந்தசேன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1637 ஆம் இலக்க 2004.07.01 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் 02 என்னும் பிரித்தொதுக்கப்பட்ட இடப்பரப்புக்கு எல்லைகள் - வடக்கே : அவ்வரைபடத்தின் துண்டு இல. 01; கிழக்கே : எச். ஏ. கயாசான மற்றும் ஆர். எம். ரண்பண்டா என்பவரின் காணி; தெற்கே : இவ்வரைபடத்தின் துண்டு இல. 04 மற்றும் 03 ; மேற்கே : வீதிக்காக ஒதுக்கல் ஆகிய எல்லைகளினுள் அமைந்துள்ள ஏக்கர் ஒன்று (1ஏ. 0றூ. 0பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் சேர்த்து. இவ்வாதனம் குளியாப்பிட்டி காணி பதிவகத்தில் M 138/ 229 இன் கீழ் இப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய பிரிவினுள் கட்டுகம்பொல ஹத்பத்துவே, கினியாகம கோரளே பிங்கிரியவில் அமைந்துள்ள தங்கஸ்பிட்டியேவத்த, கொஹோம்பகஹவத்த தங்கஸ்பிட்டியேஹேன, திக்ஹேன என்னும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. எம். பீற்றர் பெர்னாந்து அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2746 ஆம் இலக்க 1991.09.26 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் 03 என்னும் பிரித்தொதுக்கப்பட்ட நிலப் பரப்புக்கு எல்லைகள் - வடக்கே : துண்டு இல. 02 மற்றும் துண்டு இல. 01 எனும் 10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கு ; கிழக்கே : எச். எம். பீ. ஹேரத் என்பவரின் காணி ; தெற்கே : ஜே. ஏ. டீ. பெர்னாந்து என்பவரின் காணி; மேற்கே : எச். ஏ. டபிள்யூ. காமினி பெரேரா என்பவரின் காணி என்னும் எல்லைகளினுள் அமைந்துள்ள இரண்டு றூட் 9.67 பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 9.67பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் சேர்த்து. இவ்வாதனம் குளியாப்பிட்டி காணி பதிவகத்தில் M 165/ 170 இன் கீழ் இப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டிய பிரிவினுள் கட்டுகம்பொல ஹத்பத்துவே, கினியாகம கோரளே பிங்கிரியவில் அமைந்துள்ள தங்கஸ்பிட்டியேவத்த, கொஹோம்பகஹவத்த தங்கஸ்பிட்டியேஹேன, திக்ஹேன என்னும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எச். டபிள்யூ. நந்தசேன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2999ஏ ஆம் இலக்க 2008.11.24 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் 01 என்னும் பிரித்தொதுக்கப்பட்ட இடப்பரப்புக்கு எல்லைகள் - வடக்கே : வீதி, மற்றும் ஏ. கே. எம். மெற்றில்டா பெரேரா என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கே : எச். எம். கொடிமெனிக்கே என்பவர் உரிமை கோரும் காணி ; தெற்கே : ஆர். எம். ரம்பண்டா என்பவர் உரிமை கோரும் காணி; மேற்கே : எச். ஏ. எப். ஆர். சம்பத் பெரேரா என்பவர் உரிமை கோரும் காணி என்னும் எல்லைகளினுள் அமைந்துள்ள இரண்டு றூட் ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 9பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்தும் சேர்த்து. இவ்வாதனம் குளியாப்பிட்டி காணி பதிவகத்தில் இப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
பணிப்பாளர் சபைச் செயலாளர்.

11- 105

**இ. அ. நி. கூ. வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2013, ஒகத்து 28 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கட்டுகஸ்தொட்டையில் 'எம். என். சுகததாச அன்ட் கம்பனி" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தொழில் கொண்டுநடாத்துகின்ற கட்டுகஸ்தொட்டையைச் சேர்ந்த மாலகம்மான நாரங்கஸ்பிட்டியே கெதர கருணாரத்ன என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சுஜானி ஹப்புதந்திரி அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, மாச்சு 16 ஆந் திகதிய 952 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும், 2011, யூன் 23 ஆந் திகதிய 1321 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும், வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

2013, யூலை 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐம்பத்திரண்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து ஐநூற்று இருபத்தேழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 52,43,527.57) கொண்ட தொகையும், 2013, ஒகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினாறு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு ரூபா (ரூ. 16,66,656.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங் களுக்குள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) விளிம்பும் ; அத்துடன் இருபத்தாறு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று இருபத்து நான்கு ரூபா (ரூ. 26,83,324.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுக்குள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன் றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) விளிம்பும் ; அதாவது :-

அடிப்படை வீதங்கள்

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

சொல்லப்பட்ட மாலகம்மான நாரங்கஸ்பிட்டியே கெதர கருணாரத்ன என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 952 ஆம், 1321 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அதன் மீதுள்ள வேறெல்லாவற்றை யும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஐம்பத்திரண்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து ஐநூற்று இருபத்தேழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 52,43,527.57) கொண்ட தொகையையும், 2013, ஒகத்து 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினாறு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு ரூபா (ரூ. 16,66,656.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக் கொரு தடவை மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுக்குள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) விளிம்பும் ; அத்துடன் இருபத்தாறு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று இருபத்து நான்கு ரூபா (ரூ. 26,83,324.00) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுக்குள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) விளிம்பும் ; அதாவது :-

அடிப்படை வீதங்கள்

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதம் (சஎபிவீ);

அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்,

அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிகளின் மூலம் மாலகம்மான நாரங்கஸ்பிட்டியே கெதர கருணாரத்ன என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணிகளும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**952 ஆம், 1321 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகர சபை எல்லைகளினுள் யட்டிவாவலயில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ''குக்குலலவத்த' எனவழைக்கப்பட்டு அறியப்படுவதுமான காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எச். ஜே. ஜே. சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1956, ஓகத்து 30 ஆந் திகதிய 1423 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1A மற்றும் 1B யின் பாகங்களாகவுள்ளதும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. அத்தநாயக்க என்பவரினால் 1994, யூன் 29 ஆந் திகதியன்று உட்பிரிவிடப்பட்டதும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யூ. விஜேவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989, மாச்சு 11 ஆந் திகதிய 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3A என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3A பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : கண்டியிலிருந்து குருநாகலுக்குச் சொல்லும் பெருவழி; கிழக்கில் : 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 2 மற்றும் 3 அத்துடன் சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3B; தெற்கில் : மகாவலிக் கருத்திட்டத்துக்காகக் கொள்ளப்பட்ட அதே காணியின் பாகம் மற்றும் ; மேற்கில் : கொண்ட தெனிய ஆராச்சியின் தோட்டம் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தின் படி இருபத்திரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 22.5பே.) கொண்டுள்ளது. இவ்வாதனம் கண்டிக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.*

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகர சபை எல்லைகளினுள் யட்டிவாவலயில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மண் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ''குக்குலலவத்த' எனவழைக்கப்பட்டு அறியப்படுவதுமான காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எச். ஜே. ஜே. சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1956, ஓகத்து 30 ஆந் திகதிய 1423 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1A மற்றும் 1B யின் பாகங்களாகவுள்ளதும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. அத்தநாயக்க என்பவரினால் 1994, யூன் 29 ஆந் திகதியன்று உட்பிரிவிடப்பட்டதும், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யூ. விஜேவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989, மாச்சு 11 ஆந் திகதிய 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3B என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3B பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 ; தென்கிழக்கிலும் கிழக்கிலும் : சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1; மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 மற்றும் 3A ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 4114 ஆம் இலக்க வரைபடத்தின்படி நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4பே.) கொண்டுள்ளது. இவ்வாதனம் கண்டிக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.*

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

11-109

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2013 |
| | | வெள்ளி | 13.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2013 |
| | | வெள்ளி | 20.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2013 |
| | | வெள்ளி | 27.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2013 |

**அட்டவணை - 2014**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2013 |
| | | வெள்ளி | 10.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2013 |
| | | வெள்ளி | 17.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2014 |
| | | வெள்ளி | 24.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2014 |
| | | வெள்ளி | 31.01.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*